**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 5 February 2017

# சதுப்பு நிலத்தில் 888 கிலோ குப்பை

பொதுவாக சீன கலாசாரத்தில் 8 எனும் எண் அதிர்ஷ்டமாகக் கருதப்படுகிறது. அதுவும் சீனப் புத்தாண்டில் 888 எனும் எண் பல சீன மக்களுக்கு மங்களகர மானதாக இருக்கலாம். ஆனால் அந்த எண் சீனப் புத்தாண்டின் எட்டாவது நாளான நேற்று சற்று வித்தியாசமான விதத்தில் தோன்றியது.

கரையோரப் பகுதிகளைத் தூய்மைப்படுத்துவதற்கான சிங்கப்பூர் அனைத்துலக அமைப்பின் ஏற்பாட்டில் 67 தொண்டூழியர்கள் லிம் சூ காங் சதுப்பு நிலத்தில் கிட்டத்தட்ட 888 கிலோகிராம் எடை அளவு குப்பைகளை அகற்ற உதவினர்.

நீர் உறிஞ்சிகள், பிளாஸ்டிக் குவளைகள், மது பாட்டில்கள் போன்ற சிறிய பொருட்கள் முதல் ரப்பர் டயர்கள், மோட்டார் சைக்கிள் தலைக்கவசம், ‘டிரம்ஸ்’ போன்ற தாள வாத்தியங்கள் உள்ளிட்ட பெரிய பொருட்கள் வரை சதுப்பு நிலத்தில் அகற்றப்பட்டன.

ஏற்பாட்டாளர்களுள் ஒருவரான திரு என். சிவசோதி, ஈஸ்ட் கோஸ்ட் பூங்கா போன்ற கடற்கரைகள் அடிக்கடி தூய்மைப்படுத்தப்பட்டாலும் லிம் சூ காங் சதுப்பு நிலம் போன்ற பகுதிகள் மீது அவ்வளவாகக் கவனம் செலுத்தப்படுவதில்லை என்றார்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் உயிரியல் அறிவியல் துறையில் மூத்த விரிவுரையாளராக பணிபுரியும் அவர், தென்கிழக்கு ஆசிய வட்டாரத்தில் உள்ள சதுப்பு நிலங்கள், ஏராளமான உயிரினங்களுக்கு இல்லமாக அமைகின்றன என்றார்.

“லிம் சூ காங் சதுப்பு நிலத்தை மட்டும் பரவலாகப் பார்க்கும்போது குறைந்தது 12 வகை மரங்களைக் காண முடிகிறது,” என்று அவர் கூறினார்.

சிங்கப்பூரின் சதுப்பு நிலங்களைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு உள்ளது என்ற திரு சிவசோதி, அவற்றைப் பாதுகாக்க மேலும் அதிகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தாம் நம்புவதாகக் கூறினார்.

“பாசிர் ரிஸ் பகுதியில் சதுப்பு நில மரங்கள் நடப்பட்டன. சுங்காய் பூலோவில் இருந்த சதுப்பு நிலம் இயற்கை வனப்பகுதியாக மாற்றப் பட்டது. இப்போது அது கிராஞ்சிக்கு விரிவுபடுத்தப்பட்டு உள்ளது. அதனால் இச்செயல் செய்யக்கூடிய ஒன்றுதான் என நான் நினைக்கிறேன்” என்றார் அவர்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழக மாணவர்கள் முதல் இந்தியா, செர்பியா நாடுகளைச் சேர்ந்த சுற்றுப்பயணிகள் வரை பல தரப்பினரும் குப்பை பொறுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சதுப்பு நிலத்தைச் சுத்தம் செய்ய வந்தவர்களில் ஆக இளையரான மூன்று வயது சிறுமி எலிசபெத் லிம்மும் அடங்குவார். தமது பெற்றோருடன் வந்திருந்த எலிசபெத்தும் குப்பையைப் பொறுக்கி சதுப்பு நிலத்தைத் தூய்மைப்படுத்த உதவினார்.

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை இளம் வயதிலேயே தமது மகளுக்குப் புகுத்துவது முக்கியம் என்று தாம் கருதியதால் எலிசபெத்தை இங்கு அழைத்து வந்ததாகக் கூறினார் திரு ஏட்ரியன் லிம், 40.



சீனப் புத்தாண்டின் எட்டாவது நாளான நேற்று லிம் சூ காங் சதுப்பு நிலத்தில் 67 தொண்டூழியர்கள் 888 கிலோகிராம் எடை அளவு குப்பைகளை அகற்றினர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.